மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வாடிப்பட்டி, மதுரை மாவட்டம்.
முன்னிலை: திரு.D.ராம்கணேஷ் M.A., M.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி.
2021ம் வருடம் டிசம்பர் மாதம் 15 ம் நாள்
ஸ்ரீபிலவ ஆண்டு கார்த்திகை மாதம் 29ம் நாள் புதன்கிழமை
CNR No. TNMD190000-56 2012

**I.A. No.1189/2021**
**in**
**OS. No. 154/2012**

1. வேலாயி
2. சரஸ்வதி
3. தனலெட்சுமி

..... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

//எதிர்//

முருகாயி

.... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு 15.11.2021ம் தேதி விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K. முருகேசன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.R. முருகவேல் அவர்கள் ஆஜராகியும், கடந்த 08.12.2021ம் தேதி இந்நீதிமன்றத்தில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, இருதரப்பும் கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடலான...

**<u>உத்தரவு</u>**

இந்த நிர் மனுவும் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் அசல் வழக்கில் கடந்த 11.10.2012ம் தேதியில் மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டதை ரத்து செய்யக்கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 9 விதி 7 மற்றும் சட்டப்பிரிவு 151ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1. மனுவின் சுருக்கம்:</u>**

மனுதாரர்ல் அசல் வழக்கில் பிரதிவாதிகள் என்றும், அசல் வழக்கும் பிரதிவாதிகளைக்கட்டுப்படுத்தி பாகப்பிரிவினை கோரி வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அசல் வழக்கில் 2ம் பிரதிவாதிக்கு சம்மன் சார்பு செய்யப்படாமல், திரும்பி வந்த நிலையிலும், 3ம் பிரதிவாதியின் கணவருக்கும் 4ம் பிரதிவாதிக்கும் அதிக காய்ச்சல் காரணமாக உடல்நிலை சரியில்லாமல் இருந்த காரணத்தினால், வழக்கறிஞரை சந்திக்க இயலவில்லை என்றும், அதன் காரணமாக கடந்த 11.10.2012ம் தேதியில் மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே மேற்படி செயல் வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்பதால், கடந்த 03.03.2020ம் தேதியில் பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவினை ரத்து செய்ய மனுவினை அனுமதிக்க வேண்டுமென்று வாதுரைக்கப்பட்டது.

**<u>2)எதிர்மனுதாரர்/வாதி தரப்பு எதிர்உரையின் சுருக்கம்</u>**

மனுவில் கண்டுள்ள விபரங்கள் தவறானது என்றும், மனுதாரர்கள் எதிர்மனுதாரர் உடன் பிறந்த சகோதரிகள் என்றும், மேற்படி வழக்கு தரப்பினர்களின் பெற்றோர்களுக்கு 4 பெண், 1 ஆண வாரிசுகளாக இருந்த நிலையில், அவர்களின் சுய சம்பாத்திய சொத்துக்களை மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் சகோதரர் மட்டுமே தனித்து வைத்துகொண்டு பெண் வாரிசுகளுக்கு எவ்வித பாகமும் கொடுக்காததால், இந்த நிர் அசல் வழக்கும் 2012ம் வருடம் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், எதிர்மனுதாரர்/பிரதிவாதி உடல் சரியில்லாத காரணத்தால், ஆஜராகாததால், அசல் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி தள்ளுபடி செய்யப்பட்ட விபரம் மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு நன்கு தெரியும் என்றும், மேற்படி நபர்கள் ஒரே ஊரில் வசித்து வருகின்றார்கள் என்றும், மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதால், அதனடிப்படையில் அவர்களுக்கு பாகத்தை 1ம் பிரதிவாதி கொடுத்து விடுவதாக 1ம் பிரதிவாதி கேட்டுக்கொண்டதால் ஆஜராகாமல் இருந்து விட்டார்கள் என்றும், எதிர்மனுதாரர்/வாதிக்கு எவ்வித பாகமும் கிடைக்கக்கூடாது என்று 2,3,4 பிரதிவாதிகள் வேண்டுமென்றே இருந்து விட்டார்கள் தற்சமயம் மனுவில் குறிப்பிட்டுள்ள காரணங்கள் சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றும், மேற்படி மனுவும்3066 நாட்கள் காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அசல் வழக்கும் நடவடிக்கையும் காலதாமதப்படுத்தப்படவேண்டுமென்ற உட்கருத்துடன் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இம்மனு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றும் வாதுரைக்கப்பட்டது.

3) மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இம்மனு அனுமதிக்கக் கூடியதா என்பதை தீர்வு காண வேண்டியது அவசியமானதாகும்.

**4) தீர்வு:**

இருதரப்பு வாதுரைகள் மற்றும் வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்ததில், அசல் வழக்கும் வாதி தரப்பு சாட்சியான வா.சா.1ஐ 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்வதற்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில், மனுதாரர்கள்/ 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் இந்த நிர் மனுவும் இந்த நிர் மனு காலதாமதமாக தாக்கல் செய்யப்படுவதை மன்னிக்க கோரும் மனுவும் கடந்த 30.03.2021ம் தேதியில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. மேற்படி இந்த நிர் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலதாமத்தை மன்னிக்க கோரும் மனுவானது இடைக்கால மனு ஐயு. 636/2021ன்படி கோப்பிற்கு எடுக்கப்பட்டு அதில் எதிர்மனுதாரர்/வாதி தரப்பிற்கு செலவுதொகை செலுத்துவதின் பேரில் அனுமதிக்கலாம் என எதிர்மனுதாரர்/வாதி தரப்பு வழக்கறிஞரால் 01.09.2021ம் தேதியில் மேற்குறிப்பு செய்யப்பட்டதின் அடிப்படையில் ரூ.3000/- செலவுதொகை செலுத்தப்படுவதின் பேரில் மனு அனுமதிக்கக்ழூகூடியது என்ற நிபந்தனையின் படி வாதிக்கு செலவுதொகை 15.11.2021ம் தேதியில் செலுத்தப்பட்டதால், அன்றையதினம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த நிர் அசல் வழக்கும் பிரதிவாதிகளைக்கட்டுப்படுத்தி பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் அனைத்து தரப்பினர்களையும் உள்ளடக்கி தீர்வு காண்பது அவசியமானது என்பது நிலைநிறுத்தப்பட்ட சட்டக்கோட்பாடாகும். அதன்படி அசல் வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வாதம் செய்யப்பட்டிருந்தாலோ அல்லது செய்யப்படாமல் இருந்தாலோ பாகபங்கு உரிமையாளர்களுக்குரிய சொத்துக்களில் இருதரப்பு வாதங்களின் அடிப்படையிலே தீர்வு காணப்படவேண்டும் என்பது நிலைநிறுத்தப்பட்ட சட்டக்கோட்பாடு ஆகும். அதன்படி இந்த நிர் அசல் வழக்கில் மனுதாரர்கள்/2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு வாய்ப்பு கொடுக்கும் பொருட்டு கடந்த 11.10.2012ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்திரவினை ரத்து செய்வது அவசியமானதாகவும், நியாயமானதாகவுமே இந்நீதிமன்றம் கருதுகிறது.

6) மேலும் தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கினை மீண்டும் கோப்பிற்கு எடுத்து விசாரணை செய்வது தொடர்பாக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் அடியிற்கண்ட வழக்குகளில் பின்வருமாறு உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**Madras High Court 2018(1)TLNJ 53 (Civil)CRP (NPD) No. 3032 of 2012 dated 31.01.2017**

**N. Balachandiran and one another Vs. Karuppana Gounder and one another**

Civil Procedure Code, 1908, Order 9 Rule 9 & Limitation Act 1963, Section 5 Suit for partition and permanent injunction filed by petitioner suit dismissed for default for non-appearance of petitioner on 03.12.2009 Petition filed to restore suit with delay of 446 days in filing petition – Petition allowed on payment of cost and suit restored Petitioner once again

allowed suit to be dismissed for default with delay of 573 days – dismissed in trial court – Revision filed – Held – Right of parties shall not be deprived with exparte order – Relying on decision of Supreme Court in N. Balakrishnan Vs – M. Krishnamoorthy reported in (1998) 7 SCC 123 – to meet the ends of justice opportunity given to the Petitioner to conduct the suit and get a contested decree after full pledged trial- Loss caused to Respondent due to delay compensated by directing Petitioner to pay a cost of Rs. 15,000/- CRP (NPD) is allowed. என உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

7) மேலும் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில், ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டதற்கான காரணங்கள் வாதுரைக்கப்பட்டாலும், அதனால் எதிர்மனுதாரருக்கு ஏற்பட்ட கால மற்றும் பொருளாதார விரையத்தினை புறக்கணிக்க இயலாது என்பதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. இருந்தபோதிலும் ஏற்கனவே இந்த நிர் அசல் வழக்கில், காலதாமதத்தை மன்னிக்க கோரி தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால மனு எண் IA.No. 636/2021 மனுவில் செலவுதொகையாக ரூ.3000/-ம் செலுத்தப்பட்டுள்ளதால், இம்மனுவிற்கு செலவுதொகையாக ரூ.500/- செலுத்தப்படவேண்டுமென்று தீர்வு காணப்படுகிறது.

இறுதியாக இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு, மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் அசல் வழக்கு நடவடிக்கையில் எதிர்மனுதாரர்/வாதிக்கு ஏற்பட்டுள்ள காலஇழப்பு மற்றும் பொருளாதார இழப்பை ஈடுசெய்யும் பொருட்டு மனுதாரர்கள்/பிரதிவாதிகள், எதிர்மனுதாரர்/வாதிக்கு ரூ.500/- செலவு தொகையாக 22.12.2021க்குள் செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் இம்மனு அனுமதிக்கப்படுகின்றது.
அடுத்த கேட்பு நாள் : 23.12.2021.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் 2021ம் ஆண்டு டிசம்பர் மாதம் 15ஆம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

(ஓம்.D.ராம்கணேஷ்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.

//உண்மை நகல்//